# I Can
# ACT Against Scams

## தகவல் வழிகாட்டி

உங்களுக்காக
வழங்குவோர்:

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY

NATIONAL CRIME PREVENTION COUNCIL

# நான் மோசடிக்கு உள்ளானால் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் வங்கிக் கணக்கு அல்லது கடன் அட்டை அத்துமீறப்பட்டிருந்தால், மேலும் பண இழப்புகளைத் தடுக்க, உடனடியாக **உங்கள் வங்கியைத் தொடர்பு கொள்ளுங்கள்.**

- இணையம்வழி அல்லது நேரில் சென்று **காவல்துறையில் புகார் செய்யுங்கள்**; அவசர உதவி பெற 999 அழையுங்கள்.
- மோசடி பற்றிய தகவல்களை **1800 255 0000** என்ற எண்ணில் காவல்துறையிடம் தெரியப்படுத்துங்கள்.



- உங்களது இணையக் கணக்கு அத்துமீறப்பட்டால், உங்களது **தொடர்புகள், சேவை வழங்குநர்கள் அனைவரிடமும் தெரியப்படுத்துங்கள்.**
- இணையக் கணக்கை உங்களால் இன்னும் அணுக முடிந்தால், கடவுச்சொல்லை மாற்றிவிட்டு, **இரட்டை மறைச்சொல் முறையை அல்லது பன்முக உறுதிப்பாட்டைச் செயல்படுத்துங்கள்.**


- சமூக ஊடகம்வழி அல்லது தொடர்புத் தளங்களின்வழி செய்யப்படும் மோசடிகளை, **இணையத்தள நிர்வாகிகளிடமும்** புகார் செய்யுங்கள்.

- மோசடிக்காரர்கள் மறுபடியும் உங்களை அணுகக்கூடும் என்பதால் **எச்சரிக்கையாக இருங்கள்**. அவர்கள் காவல்துறை அதிகாரிகளை அல்லது அரசாங்க அதிகாரிகளைப் போல் பாசாங்கு செய்யக்கூடும்.

- மோசடிக்கு உள்ளாவது ஆழ்ந்த மனத்தவிப்பை உண்டாக்கலாம். அதனால், குடும்பத்தாரிடமும் நெருங்கிய நண்பர்களிடமும் **ஆதரவு நாடுங்கள்**.

# மோசடி குற்றச்செயல்களின் தொடர்பில் காவல்துறை மேற்கொள்ளும் புலனாய்வு பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## நான் காவல்துறையில் புகார் செய்யும்போது என்ன நடக்கும்?




இந்தச் செயலோட்ட வரைபடம், காவல்துறையில் ஒரு புகார் செய்யப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும் பொதுவான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகளை மேலோட்டமாகக் காட்டுகிறது.

## மோசடி தொடர்பான வழக்கைப் புலனாய்வு செய்ய காவல்துறைக்கு எவ்வளவு காலமெடுக்கும்?

மோசடி தொடர்பான வழக்கைப் புலனாய்வு செய்து முடிப்பதற்காகும் காலம் பல்வேறு காரணங்களைப் பொறுத்தது. மோசடி எந்த வகையானது, மோசடிக்காரர் எந்த அளவுக்குத் தனது தடங்களை மூடிமறைத்திருக்கிறார், அபகரிக்கப்பட்ட பணம் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதா போன்றவை அதில் உள்ளடங்கும்.

சிங்கப்பூரில் நடக்கும் மோசடிகளில் அபகரிக்கப்படும் பணம் பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அத்தகைய நிலையில், புலனாய்வுக்குக் கூடுதல் காலமெடுக்கும். சூழ்நிலைகளைப் பொறுத்து, ஒவ்வொரு வழக்கையும் புலனாய்வு செய்வதற்காகும் நேரம் குறிப்பிடத்தக்க அளவு மாறுபடும்.

## நான் காவல்துறையில் புகாரளித்த வழக்கின் அண்மை நிலவரம் பற்றி எனக்கு எப்போது தகவல் கிடைக்கும்?

உங்கள் வழக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படும்போது உங்கள் வழக்குக்குப் பொறுப்பேற்றுள்ள புலனாய்வு அதிகாரி (IO) உங்களுக்குத் தகவலளிப்பார். ஒவ்வொரு வழக்கும் தனித்துவமானது என்பதால், ஒவ்வொரு வழக்கையும் புலனாய்வு செய்வதற்குத் தேவைப்படும் நேரம் மாறுபடும் என்பதைப் புரிந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்களது புலனாய்வு அதிகாரியிடமிருந்து ஆறு மாதங்களாக எந்தத் தகவலும் வராவிட்டால், திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை காலை 8.30 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையிலும், வெள்ளிக்கிழமைகளில் காலை 8.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் இடையிலும் (பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து) புலனாய்வு அதிகாரியுடன் அலுவலக நேரத்தில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் புலனாய்வுப் பிரிவின் தொடர்பு நிலையத்தையும் (IBCC) அழைக்கலாம். உங்கள் வழக்கைப் புகார் செய்து ஏழு வேலை நாட்களுக்குள் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் / மின்னஞ்சலில் தொடர்பு எண் கொடுக்கப்பட்டிருக்கும். காவல்துறையினரின் அவசரக் கவனிப்பு தேவைப்பட்டால், ‘999’ அழையுங்கள்.

## நான் இணைய மோசடிக்கு உள்ளாகி என் பணத்தைப் பறிகொடுத்தேன். காவல்துறையினரால் என் பணத்தை மீட்டுத் தர முடியுமா?

மோசடி கும்பல்கள் மோசடி செய்து அபகரிக்கும் பணத்தை, வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு வேகமாக அனுப்புவது வழக்கம்.

பணம் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அதனை மீட்பது சிரமம். வெவ்வேறு அதிகார வரம்புகளுக்கு உட்பட்ட நாடுகளில் பணத்தை மீட்கும் முறையும் சட்டங்களும் மாறுபட்டவையாக இருப்பது இதற்குக் காரணம்.

பணம் சிங்கப்பூரிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அதனை மீட்கக்கூடிய சாத்தியம் மிகவும் குறைவு. அந்தப் பணத்தைப் பெரும்பாலும் மீட்க முடியாமல் போகலாம்.

## என் பணம் சிங்கப்பூரிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அதனை மீட்பது காவல்துறையினருக்கு ஏன் மிகப்பெரிய சவாலாக இருக்கிறது?

வெளிநாட்டுக் கணக்குகள் சிங்கப்பூரின் அதிகார வரம்புக்கு வெளியே உள்ளன. அதனால் சிங்கப்பூர் காவல்துறையால் கணக்கை முடக்க அல்லது கைப்பற்ற அல்லது பரிவர்த்தனையை மாற்றும்படி வெளிநாட்டு வங்கியைக் கட்டாயப்படுத்த எந்தவிதச் சட்ட அதிகாரத்தையும் பயன்படுத்த இயலாது.

Iஇத்தகைய சூழ்நிலைகளில், காவல்துறையால் வெளிநாட்டுக் காவல்துறைக்குத் தகவல் அளித்து, புலனாய்வு செய்ய உதவி நாட மட்டுமே முடியும். வெளிநாட்டின் சட்டங்கள், வெளிநாட்டு வங்கிகளின் உள்நாட்டுத் தொழில் கொள்கைகள் ஆகியனவும் இதில் சம்பந்தப்பட்டுள்ளன.

பணம் சிங்கப்பூரிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அதனை மீட்கக்கூடிய சாத்தியம் மிகவும் குறைவு. அந்தப் பணத்தைப் பெரும்பாலும் மீட்க முடியாமல் போகலாம்.

## என் பணம் மீட்கப்பட்டால், காவல்துறையினர் அதை என்னிடம் திருப்பித் தருவதற்கு எவ்வளவு காலமாகும்?

கைப்பற்றப்படும் பணத்தைப் புலனாய்வு நிறைவடைந்த பிறகு மட்டுமே பாதிக்கப்பட்டவரிடம் காவல்துறையினர் திருப்பித் தரமுடியும்.

புலனாய்வுப் பூர்த்தி அடைவதற்காகும் காலமும், கைப்பற்றப்படும் பணம் பாதிக்கப்பட்டவரிடம் திருப்பித் தரப்படுவதற்காகுக் காலமும், வெவ்வேறு வகை மோசடிகளுக்கு வெவ்வேறு காரணங்களால் மாறுபடும்.

எடுத்துக்காட்டாக, பணத்தை மீட்டுத்தருமாறு பலர் கோரிக்கை செய்திருக்கிறார்களா, புலனாய்வுக்கு அல்லது நீதிமன்ற விசாரணைக்கு அல்லது நீதிமன்றத்தின் மற்ற நடைமுறைகளுக்கு அந்தப் பணம் இன்னமும் தேவைப்படுகிறதா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

# நான் எங்கே ஆதரவு பெற முடியும்?

## பாதிக்கப்பட்டோர் பராமரிப்பு அதிகாரி வழங்கும் ஆதரவு

புலனாய்வின்போது மற்றும்/அல்லது தொடர் நடவடிக்கையின்போது உங்களுக்கு உணர்வுபூர்வ ஆதரவு தேவைப்பட்டால், உங்களது புலனாய்வு அதிகாரியிடம் தெரியப்படுத்துங்கள். நீங்கள் பாதிக்கப்பட்டோர் பராமரிப்பு அதிகாரியிடம் பேச அவர் ஏற்பாடு செய்து தருவார்.

இந்த அதிகாரிகள், குற்றச்செயலுக்கு உள்ளானவர்களுக்கு உணர்வுபூர்வ, நடைமுறை ஆதரவு வழங்க பயிற்சி பெற்றிருக்கும் தொண்டூழியர்கள் ஆவர்.

## சமூக ஆதரவு

சமூகத்திலிருந்து உங்களுக்கு மேற்கொண்டு ஆதரவு தேவைப்பட்டால், பின்வரும் சேவைகளை அணுகலாம்:

### மனநலன்

| | |
|---|---|
| சிங்கப்பூர் சமாரியர்கள் (24 மணிநேரத் தொலைபேசி சேவை) | 1 767 |
| மனநல மருத்துவமனையின் உதவித் தொலைபேசி சேவை (24 மணிநேரம்) | 6389 2222 |
| சிங்கப்பூர் மனநலச் சங்கம் | 1800 283 7019 |

### நிதி உதவி

| | |
|---|---|
| சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு, சமூகச் சேவை அலுவலகம், காம்கேர் தொலைபேசி சேவை<br><br>அடிப்படைத் தேவைகளுக்குப் பண உதவி தேவைப்படுவோருக்கானது. | 1800 222 0000 |

### ஆலோசனை

| கேர் கார்னர் கட்டணமில்லா சீன மொழி தொலைபேசி ஆலோசனை சேவை | டச்லைன் (ஆலோசனை) | கேர் கார்னர் ஆலோசனை நிலையம் | ஆலோசனை மற்றும் பராமரிப்பு நிலையம் | Silver Ribbon (ஆலோசனை) |
|---|---|---|---|---|
| 1800 353 5800 | 1800 377 2252 | 6353 1180 | 6536 6366 | 6386 1928 |

# மோசடிகளிலிருந்து உங்களை மேலும் பாதுகாத்துக்கொள்ள உதவிக்குறிப்புகள்

## ADD (சேர்க்கவும்)

- மோசடி அழைப்புகளைத் தடுப்பதற்கும், மோசடிக் குறுந்தகவல்களைக் கண்டுகொள்வதற்கும் உங்கள் கைப்பேசியில் **ஸ்கேம்ஷீல்டு செயலியை** நிறுவுங்கள்
- உங்கள் கைப்பேசியைத் தீங்கு விளைவிக்கும் மென்பொருளிலிருந்து பாதுகாக்க, **நச்சுநிரல் தடுப்புச் செயலியை** நிறுவுங்கள்
- உங்கள் வங்கிக் கணக்கிலுள்ள சேமிப்பை மோசடிகளிலிருந்து மேலும் பாதுகாத்துக்கொள்ள **பணப்பூட்டைச்** செயல்படுத்துங்கள்
- வெளிநாட்டிலிருந்து வரும் மோசடி அழைப்புகளிலிருந்து உங்களை மேலும் பாதுகாத்துக்கொள்ள, **அனைத்துலக அழைப்புகளைத் தடுக்கும் சேவையைச்** செயல்படுத்துங்கள்
- உங்களது வங்கிக் கணக்குகள், சமூக ஊடகக் கணக்குகள், இணையக் கணக்குகள் அனைத்தையும் பாதுகாக்க **இரட்டை மறைச்சொல் முறையை அல்லது பன்முக உறுதிப்பாட்டைச்** செயல்படுத்துங்கள்

## CHECK (சரிபார்க்கவும்)

- நீங்கள் எதிர்நோக்கும் சூழ்நிலை ஒரு மோசடியாக இருக்குமோ என உறுதியாகத் தெரியாவிட்டால் **NCPC மோசடித் தடுப்பு உதவித் தொலைபேசி சேவையை 1800-722 6688** என்ற எண்ணில் அழையுங்கள், **ஸ்கேம்ஷீல்டு வாட்ஸ்ஆப் சாட்பாட்**-டில் சரிபாருங்கள், அல்லது **உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம்** ஆலோசனை கேளுங்கள்
- அண்மை மோசடிகளைப் பற்றி தெரிந்துகொள்ள **ScamAlert இணையத்தளத்தை** நாடுங்கள்

## TELL (சொல்லுங்கள்)

- நீங்கள் எதிர்நோக்கிய மோசடிகளைப் பற்றி **ஸ்கேம்ஷீல்டு செயலியிடம்** அல்லது **ஸ்கேம்ஷீல்டு வாட்ஸ்ஆப் சாட்பாட்-டிடம்** சொல்லுங்கள்
- அண்மை மோசடிகள் பற்றியும் மோசடிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் **உங்கள் அன்புக்குரியோரிடம்** சொல்லுங்கள்

**உங்களுக்காக வழங்குவோர்:**

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY

NATIONAL CRIME PREVENTION COUNCIL